**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**புனர்வாழ்வு பணியகம்**

# வெற்றிடம்

## புனர்வாழ்வு பணியகம் மற்றும் அதன் கீழ் நிறுவப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் பின்வரும் தொழில்களுக்கு இயைபாக நிலவும் வெற்றிடங்களுக்காக தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**அடிப்படைத் தகைமைகள்:**

1. இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.
2. ஒப்படைக்கப்படும் பணியின் பிரகாரம் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் நியமிக்கப்படும் எந்தவொரு இடத்திலும் கடமையாற்ற இணங்க வேண்டும்.
3. சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.
4. ஆட்சேர்க்கப்படும் நாளில் 22 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். (அரச நிறுவனங்களில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**ஆலோசனை அதிகாரி (Counseling Officer) (புனர்வாழ்வு) - நிரந்தர அடிப்படை/ஒப்பந்த அடிப்படை**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - ஆலோசனை உளவியல் / உளவியல் / சமூகவியல் / குற்றவியல் தொடர்பான அல்லது இந்த பதவிக்கு இயைபான விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் - மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஆலோசனை உதவியாளர் (புனர்வாழ்வு) (MA 2-2) சேவை வகுதி பதவிக்கு இயைபான விடயத்துறை பதவியொன்றில் குறைந்தபட்சம் எட்டு வருட (08) திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**நிரந்தர சம்பள அளவு:** MA 4 2025 - ரூபா 64,320.00 - 10×1360 - 15×1670 – 5×2040 – 113,170.00

**ஒப்பந்த சம்பளம்:** ரூபா 76,398.00

**ஆலோசனை உதவியாளர் (Counseling Assistant) (புனர்வாழ்வு) - நிரந்தர அடிப்படை/ஒப்பந்த அடிப்படை**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பதவியின் கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத பின்வரும் துறைகளில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். (குறைந்தபட்சம் ஒரு துறையிலாவது தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்)

ஆலோசனை
உளவியல்
சமூகக்கல்வி
போதைப்பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவம்

உள்வாரி விண்ணப்பதாரிகள் - மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் ஏற்புடையதாகும்.

**நிரந்தர சம்பள அளவு:** MA 2-2 2025 - ரூபா 50,540 10×540 - 7×630 – 4×1080 - 20× 1280 – 90,270.00

**ஒப்பந்த சம்பள அளவு:** ரூபா 64,760.00

மேற்கூறிய பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தில் காட்டப்பட்டுள்ள சான்றிதழ்களின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2025-12-01ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். ஆட்சேர்ப்பின் போது மக்கள் தொகை விகிதாசாரத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்விச் சான்றிதழ்
(இ) தேசிய அடையாள அட்டை
(ஈ) கிராம சேவையாளர் சான்றிதழ்
(உ) 03 மாதங்களுக்குள் பெறப்பட்ட 02 நன்னடத்தைச் சான்றிதழ்கள்
(ஊ) விளையாட்டு மற்றும் ஏனைய திறமை சான்றிதழ்
(எ) ஏனைய சான்றிதழ்கள்

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112883891 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும் தபால் மூலம் அனுப்புவதற்காக.

**புனர்வாழ்வு பணியகம்,**
**இல. 462/2, கடுவளை வீதி,**
**கனஹேன, பத்தரமுல்ல.**

**தொ.பே. இல. 011-2883891**
**மின்னஞ்சல் முகவரி: bcg.rehabilitation@gmail.com**